
ஓம்

சிவ சிவ

சிவபுராணம்



அன்பளிப்பு :

அருள்நெறித் திருக்கூட்டம்

கண்டவராயன்பட்டி.

சௌத் இந்தியா கார்ப்பரேஷன்

டாக்டர் நஞ்சப்பா தெரு,

கோயம்புத்தூர்.

நல்வாழ்த்துக்கள்

ஆர். எம். ரெங்கநாதன் செட்டியார்

ஜெனரல் மானேஜர்.

சிவ சிவ

சிவபுராணம்

(மகா சிவன் இராத்திரி வெளியீடு)

தொகுத்தவர்:

நா. அருணாசலன்

அன்பளிப்பு:

அருள்நெறித் திருக்கூட்டம்

கண்டவராயன்பட்டி.

சுக்ல மாசி ௰௧ 23—2—1990

அருள்நெறியின் அறிவுரை

அனைத்துயிர் ஒன்றென்று எண்ணி
அனைவருக்கும் பசியை யாற்றி
மனத்துள்ளே பேதா பேதம்
வஞ்சம் பொய் சூது களவு
சினத்தையும் தவிர்ப்போ மாகில்
செய் தவம் மற்றொன்றுண்டோ?

ஓம்

என் கடன் பணிசெய்து கிடப்பதே

சிலவார்த்தைகள்

சிவனடியார்களும், சிவநெறியுடைய பக்தர்களும், நம் சிவ மதத்தைச் சார்ந்த அனைவரும் குழந்தைகளும் அனுதினமும் சிவபுராணம் பாராயணம் செய்து சிவபெருமானை வழிபாடு செய்ய வேண்டும் என்பது திருக்கூட்டத்தின் குறிக்கோள்.

எனவே இவ்வாண்டு மகா சிவன் ராத்திரியாகிய இன்று திருக்கூட்ட வெளியீடாக இச் சிவபுராணம் மலர்கிறது. பக்தர்கள் படித்துப் பாராயணம் செய்து சிவபெருமானை வழிபாடு செய்வது சிறப்பாகும்.

வாழ்த்துரை நல்கிய நமது பெருமதிப்பிற்குரிய தவத்திரு. அடிகளார் அவர்கட்கு எமது நன்றி!

கண்டவராயன்பட்டி
சுக்ல - மாசி ௰௧
23—2—1990

நா. அருணாசலன்,
செயலாளர்,
அருள்நெறித் திருக்கூட்டம்.

ஓம்

சிவ சிவ

அருள்நெறித் தந்தையின்

வாழ்த்துரை

நமது அன்பிற் சிறந்த திரு. நா. அருணாசலன் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில் உயர்தரக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் தோன்றியுள்ள பழ கரு. குடும்பத்தார் தொன்று தொட்டு சிவனுக்கே தொண்டு செய்வதில் ஆர்வமுடையவர்கள். நமது திருமடத்தில் பாரம்பரியமாக தொடர்பு கொண்டவர்கள். நால்வரால் பாடல் பெற்ற திருப்புத்தூரில் திருப்பணி செய்தவர்கள் திருக்கோவில்கள் கட்டிப் பெருமை பெற்றவர்களாவர்.

இன்று திரு. நா. அருணாசலன் அவர்களுக்கு வயது 80 ஆகியும் இளமையாகவே காட்சியளித்து தொண்டராகவேயிருந்து சமூக சேவை, சமயத் தொண்டு, தேசப்பணி ஆகியவைகளை செய்து வருவது கண்டு மகிழ்கின்றோம். அஞ்சாத நெஞ்சும் தளராத ஊக்கமும் அயராத உழைப்பும் எதையும் துணிந்து சொல்லும் வீரமும் சொல்வதைச் செய்யும் திறமையும் கொண்ட இவர்கள் 33 ஆண்டு

களாக நமது திருக்கூட்டத்தின் செயலாளராக இருந்து சமயத்தொண்டு. சமயவழிபாட்டு நூல்கள் வெளியிடு வதைப் பாராட்டுகிறோம். இவர்களின் சேவை போற்று தற்குரியன

சிவபுராணத்தைச் சிறு நூலாக வெளியிட்டுத் திருமடங்களுக்கும் பக்தர்களுக்கும் சமர்ப்பிப்பது சிவபக்தர்களுக்குப் பெரிதும் பயனளிக்கும்.

அருள்நெறித் தொண்டராக இயங்கும் திரு. நா. அருணாசலன் உடல் நலத்துடன் இன்னும் நீண்டநாள் நம்முடன் வாழ்ந்து சமயத்தொண்டு தேசத் தொண்டு செய்தும், கிராம நலன்களைக் கவனித்து மக்கள் குறைகளை தீர்க்கவும் சிவபெருமான திருவருள் முன்நிற்குமென்பதில் ஐயமில்லை.

திருவண்ணாமலை ஆதீனம்
குன்றக்குடி
சுக்ல - மாசி ௰௧
23—2—1990

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி
அருணாசல தேசிக பரமாச்சாரிய
சுவாமிகள்.
(அடிகளார்)

❋

ஓம்

அருள்மிகு கற்பக விநாயகர் வணக்கம்



தனயன் வேண்டினும் சம்பத்து வேண்டினும்
மனையை வேண்டினும் வான்பயன் வேண்டினும்
கனைவளங்கொள் கணேச புரேசனை
இனிய கற்பக மூர்த்தியை ஏத்துமே.

(தமிழ்க் கடல் ராய. சொ)

ஓம்

அருள்மிகு தென்பரங்கிரி வேலன் வணக்கம்



அருள்மிக்க தென்பரங்கிரி வேலன் மேல்
தணியாத உள்ளத்தன்புப் பெருக்கினாலே
வருகின்ற தீங்கினையும் விலக்கிநிற்கும்
வடித்திட்ட வழிபாடல் ஓதுவார்பால்
திருநின்ற வலமார்புப் பெருமானருள்
தினமோங்கும்! வளமோங்கும்! திடமோங்கும்!
உருகின்ற ஒளிதோன்றும்! உண்மையான
ஒருபாதை நிலைகாட்டும்! உறுதிதானே!

நா. அருணாசலன்

ஓம்

சுவாமியே சரணம்



மெய்யெல்லாம் திரு நீறாக
விழியெல்லாம் அருள் நீராக
பொய்யில்லா மனத்தா ராகி
புலனெல்லாம் ஒருத்த ராகி
வசை வம்பில்லா உத்தமராகி
புனிதனே புண்ணியனே ஐயனே
அன்பர்க்கு அருள்புரியும் ஐயப்பனே
உன் பாதம் அடைக்கலமே.

நா. அருணாசலன்

ஓம்

சிவ சிவ

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

சிவபெருமான் வணக்கம்



பெற்ற தாய்தனை மகன் மறந்தாலும்
பிள்ளையைப் பெற்ற தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகங் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப் பது மறந்தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந்தோங்கும்
நமச்சிவாயத்தை என்றும் மறவோம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்



தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவ புராணம்

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும்என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!

ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசன் அடிபோற்றி! சிவன் சேவடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகி, கசிந்துஉள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலம்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே!
மாசுஅற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசம்ஆம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெட,

பேராது நின்ற பெருங்கருணைப் பேர்ஆறே!
ஆரா அமுதே! அளவுஇலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி,என் ஆர்உயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையும்ஆய், அல்லையும்ஆம்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம், நடுஆகி, அல்லானே!
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுஉணர்வார்
தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே! நுணுக்குஅரிய நுண்உணர்வே!
போக்கும், வரவும், புணர்வும்இலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேர்ஒளியே!
ஆற்றுஇன்ப வெள்ளமே! அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளிஆய், சொல்லாத நுண்உணர்வாய்!

மாற்றம்ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து,
அறிவுஆம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என்சிந்தனையுள்
ஊற்றுஆன உண்ஆர் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்குஉடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்; "எம்ஐயா", அரனே! "ஓ" என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து, பொய்கெட்டு, மெய்ஆனார்
மீட்டுஇங்கு வந்து, வினைப்பிறவி சாராமே.
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்றுஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே! "ஓ" என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லி, திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன்அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

தவநெறி தந்த அறிவுரை

அன்பாயிரு	ஆனால்?	அடிமையாயிராதே
இரக்கமாயிரு	ஆனால்?	ஏமாந்துபோகாதே
கொடையாளியாயிரு	ஆனால்?	ஓட்டாண்டியாயிராதே
சிக்கனமாயிரு	ஆனல?	கருமியாயிராதே
சுறுசுறுப்பாயிரு	ஆனால்?	படபடப்பாயிராதே
பொறுமையாயிரு	ஆனால்?	சோம்பலாயிராதே
வீரனாயிரு	ஆனால்?	போக்கிரியாயிராதே
இல்லறத்தைநடத்து	ஆனால்?	காமவெறியனாயிராதே
பற்றற்றவனாயிரு	ஆனால்?	காட்டுக்குப்போகாதே

நல்லோரை நாடு — நாட்டுக்குச் சேவை செய்

தன்னலமற்ற சேவையே — பயன் தரும்.

❋

பாங்க் ஆப் மதுரை

தலைமைக் காரியாலயம்;

758, அண்ணா சாலை,

சென்னை-2.

*

எங்கள் கிளைகளை அணுகி உங்கள்

வருங்கால நலனைக் கருதி

சேமிப்பு செய்யுங்கள்.

*

PL. வெங்கடாசலம் M. A.

மண்டல மேலாளர்,

காரைக்குடி.

செல்வச் சிறப்பும், சமயப்பற்றும், இரக்கச் சிந்தையும் நிறைந்த இவர்கள் எங்கள் திருக் கூட்டத்திற்கு செய்யும் உதவிகள் மறக்கயியலாது. என்றும் மறவோம்.

நா. அருணாசலன்